# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.265/2025** |
| Prosecution witness | : | P.W.1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | ராமதாஸ் |
| Father's /Husband Name | : | பொன்னுசாமி |
| Village | : | கூந்தலூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 54 |
| Occupation | : | விவசாயி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 20th day of January 2026.
A1 to A3 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் தாலுக்கா கூந்தலூர் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை சம்பவத்திற்கு பின்பு தெரியும். கடந்த 2023 ம் வருடம் 11 ம் மாதம் இரவு 09.00 மணி நான் வீட்டு வாசலில் உள்ள கட்டிலில் உட்கார்ந்திருந்தேன். 1ம் எதிரி ரூபனும் மற்ற எதிரிகளும் மது குடித்துவிட்டு என் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்து குச்சிகாரி மகனே, தேவிடியா மகனே என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசினார்கள். அதனால் நான் இவ்வாறு அசிங்கமான வார்த்தைகளால் பேசியதை கேட்டேன். அதனால் 1ம் எதிரி ரூபன் அவரது கையால் எனது கண்ணத்திலும் முதுகிலும் அடித்து நீ யார் அதை கேட்பது என்று கூறினார். பின்பு 2 ம் எதிரி சீனிவாசன் என்னை வயிற்றில் உதைத்து என்னை கீழே தள்ளிவிட்டார். நான் கீழே விழுந்ததில் எனக்கு பின்னந்தலையில் அடிப்பட்டு விட்டது. பின்பு 3 ம் எதிரி அபினாஷ் எனது சட்டையை பிடித்து எனது குரல் வளையை பிடித்து கொலை செய்து விடுவதாக மிரட்டினார். மேற்படி சம்பவத்தை சிவானந்தம் மற்றும் எங்கள் கிராமத்தில் உள்ளவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பின்பு காயம்பட்ட என்னை எனது அண்ணன் மகன்

ஆசைமணி என்பவர் நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். நான் சிகிச்சையிலிருந்த போது போலீசார் என்னிடம்விசாரணை செய்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி எதிரிகள் எனது வீட்டு வாசலில் நின்றுகொண்டு தகாத வார்த்தைகளால் பேசியதில் எனக்கு மிகவும் அருவருப்பாக இருந்தது. மேலும் பெண்பிள்ளைகள் அங்கு இருந்ததால் அவர்கள் பேசியது அநாகரிகமாகவும் இருந்தது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.01.20 15:21:40 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`